YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte, COLOMBO - 4
Telephone:- 508087—90

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 28 திங்கட்கிழமை [14-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 314

# முல்லைத்தீவில் மினி முகாம் தகர்ப்பு
# 21 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு!

## 8 சிப்பாய்களின் சடலங்களையும் புலிகள் போராளிகள் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், அக்டோபர் 14

முல்லைத்தீவு, 3 ஆம் கட்டை ஸ்ரீலங்கா இராணுவ மினி முகாம் மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில், விடுதலைப் புலிகள் பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தச் சம்பவத்தில் 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மினிமுகாம் விடுதலைப் புலிகளால் முற்றாக அழித்து நாசமாக்கப்பட்டது. அங்கிருந்த 8 சிப்பாய்களின் சடலங்களையும், பெருமளவு நவீன ரக ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

மினி முகாம் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

- ★ மினிமினி எஸ். எம். ஜி. — 03
- ★ அவற்றிற்கான மேலதிக சுடுகுழல் — 03
- ★ ஆர். பி. ஜி. — 01
- ★ அதற்கான எறிகணை — 14
- ★ புறொப்ளர் — 14
- ★ 40 மி. மீ. கைத்துப்பாக்கி — 01
- ★ அதற்கான எறிகணை — 08
- ★ எஸ் என் சி. ரகத் துப்பாக்கி — 13
- ★ அவற்றிற்கான ரவைக்கூடு — 88
- ★ ரி - 56 ரகத் துப்பாக்கி — 01
- ★ 52 மி. மீ. மோட்டோர் — 01
- ★ அதற்கான எறிகணை — 61

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கவச வாகனமும் சேதம்!

முல்லைத்தீவு 3ஆம்கட்டை மினிமுகாம்மீது புலிகள் தாக்குதல் தொடுத்ததை அடுத்து, படையினருக்கு உதவியாக பிரதான முகாமில் இருந்து பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் முன்னேறி வந்தனர்.

அந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளின் மற்றோர் அணி கடும் தாக்குதலை நடத்தியது. அப்போது படையினரின் ஒரு கவச வாகனம் முற்றாகச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த அந்தப் [3 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



பார்சல்களை விழுங்கிற பெருச்சாளிகள் கப்பலில இருந்திருக்குது போல!

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், அக். 14

'குமரி' கப்பலில் நேற்று முன்தினம் அதிகமான பொதிகளில் வந்துள்ள தபால்கள் இன்று விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றே தபால்கள் தரம் பிரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-8)

## கப்பலில் வந்த தபால்கள்: சில 'பார்சல்கள்' மாயம்!

கொழும்பிலிருந்து கப்பலில் யாழ். தபாலகத்துக்கு வந்தவை 'பார்சல்'களில் சிலவற்றைக் காணவில்லை. அவை கைமாற்றப்பட்டுவிட்டனவா?

-இவ்வாறு தபாலக அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ். தபாலகத்துக்கு கப்பலில் வரும் தபால் பொதிகளுடன் அதற்கான விவரப்பட்டியலும் வருவது வழமை; அத்தப்பட்டியலின்படி 'பார்சல்கள்' குறைவாக உள்ளனவாம்;

கொழும்புத் துறைமுகத்தில் கடற்படையினரின் சோதனையின்போது அவை பறிமுதல் செய்யப்பட்டனவா? அல்லது வேறு ஏதேனும் வகையில் கையாடப்பட்டனவா என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை.

கப்பலில் வரும் தபால் பொதிகளில் இம்முறையே இத்தகைய குளறுபடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிக்கப்பட்டது. (ஓ-8)

## மீனவர் மீது ஹெலி தாக்கு! கிளாலியில் இருவர் பலி!!

தென்மராட்சி கிளாலி கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் இரண்டு மீனவர்கள் பலியானார்கள்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

எதிர்மனசிங்கம் [30 வயது- பூவரசங்குளம், வவுனியா], பஜசுதாசன் இராஜன் [18 வயது - கிளாலி] ஆகியோரே பலியானவர் ஆவர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த நவாலியைச் சேர்ந்த எஸ். ஜேசுதாசன் [28 வயது] நீண்ட தூரம் கடலில் நீந்தி நேற்றுக்காலை கரை சேர்ந்தார்.

அவர் வெளியிட்ட தகவல்களை அடுத்து இறந்த மீனவர்களின் சடலங்களுடன் நேற்றுப் படகு மீட்கப்பட்டது.

காயமடைந்த ஜேசுதாசன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-8)

## இரு வேங்கைகள் களப்பலி

முல்லைத்தீவில் நேற்று அதிகாலை நடந்த தாக்குதல் சம்பவங்களின் போது, இரு வேங்கைகளும் களப்பலியானார்கள்.

லெப்டினன்ட் கிரி [மரிமுத்து வசந்தகுமார் — வேலணை], லெப்டினன்ட் நேசன் [சின்னத்தம்பி சந்குணசீலன் — வற்றாப்பளை] ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

தாக்குதலின்போது முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்காவல் படை வீரர் ஒருவரும் காயமடைந்தார்.

## வடக்கே சைக்கிள் எடுத்து வரத் தடை!

யாழ்ப்பாணம், அக். 14

வடக்கே சைக்கிள்கள் எடுத்துவர மீண்டும் வவுனியாவில் படையினர் தடைவிதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பயணி ஒருவர் சைக்கிளில் ஓடி வரலாம். ஆனால் மேலதிகமாக ஒரு சைக்கிளை கொண்டுவர முடியாது என்று படையினர் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தொண்டர் நிறுவனம் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து எடுத்து வந்திருந்த 20 சைக்கிள்களை வவுனியாவுக்கு வடக்கே கொண்டு வர படையினர் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கே சைக்கிள் எடுத்து வர முன்னர் தடை இருந்தது என்பதும் அது பின்னர் நீக்கப்பட்டிருந்தது என்பதும் தெரிந்தவையே. [ஓ-3]

## யாழ்தேவி தடம் புரண்டது! இருபது பயணிகள் காயம்!!

கொழும்பு, அக். 14

நேற்றுக் காலை 5-45 மணிக்கு கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்ட யாழ்தேவி ரயில் மஹவ கொட்ட ரயில் நிலையத்திற்கும் தென்முல்ல ரயில் நிலையத்திற்கும் இடையே தடம் புரண்டது.

இச்சம்பவத்தில் சுமார் 20 பயணிகள் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

சேதமடைந்த ரயில் பாதையைப் பழுது பார்க்கவும் வழ [3 ஆம் பக்கம் பார்க்க]

## சுட்டுக் கொலை

கொழும்பு, அக். 14

மட்டக்களப்பு இருதயபுரத்தில் வைத்து ரிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

தாம் கடமையாற்றி வந்த பொலிஸ் நடமாடும் முகாமிற்கு அருகிலுள்ள கடை ஒன்றிற்கு அந்த கான்ஸ்டபிள் சென்றிருந்தார் என்றும்—

அப்போதே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. [ஓ-எ]

## தொண்டாவைக் கூட்டிச் செல்ல செஞ்சிலுவை அதிகாரிகள் தயார்!

கொழும்பு, அக். 14

''கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் கோரிக்கை விடுக்கப்பட்டால் அமைச்சர் தொண்டமானை கூட்டிச் செல்லவோ, விடுதலைப் புலிகளை அழைத்து வரவோ நாம் தயார்.''

—இவ்வாறு கூறினார் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரிவுத் தலைவர் பியரே வெற்றச் கொழும்பில் பத்திரிகை ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

''அமைச்சர் தொண்டமானின் சமரச முயற்சியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஒத்துழைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமா?'' என்று கேள்வி எழுப்பியபோது—

''இணக்க தினை இருந்து மாணவர் அரசுக்கும் அதே நேரம் விடுதலைப் புலிகளுக்கும் நாங்கள் உதவ முடியும். ஆனால் எந்த தரப்புக்காகவும் நாங்கள் பேச முடியாது''—

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 13 ராணுவ அதிகாரிகள் மீது தேசத் துரோகக் குற்றம்!

### நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனை

கொழும்பு, அக். 14

வடபகுதிக்கு எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்ட பொருள்களை அங்கு அனுப்பி வைக்க உதவியதாகக் கூறப்படும் 13 இராணுவ அதிகாரிகள் மீது தேசத்துரோக வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுக்கு எதிரான தொழிற் சங்கங்களின் போருக்கு உடந்தையாக இருந்ததாக இவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டில் இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் மரணதண்டனை விதிக்கப்படும்; அல்லது அவர்களது சொத்துக்கள் முழுவதும் பறிமுதல் செய்யப்படுவதோடு 20 வருடங்கள் வரையான சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட இவர்கள் தற்போது இராணுவ தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்துக்கு எதிரான சதி மற்றும் போர் பற்றிய குற்றங்களை விவரிக்கும் தண்டனைச் சட்டக் கோவையின் 114, 115, 116 ஆம் பிரிவுகளின் கீழ் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்படும் என்றும்—

இவர்களுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும், சட்ட மற்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## ஸ்ரீலங்கா அதிகாரிகளுடன் தூதுவர் ஜா முக்கிய பேச்சு!

விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரச ஆயுதங்களை வழங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இந்தியத் தூதர் நரேந்திரநாத் ஜா கொழும்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் அவசர ஆலோசனை மேற்கொள்வதற்காக புதுடில்லி விரைந்திருந்த தூதுவர் ஜா, வார இறுதியில் கொழும்பு வந்து சேர்ந்தார்.

கொழும்பு வந்ததும் அவர் ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் உட்பட பல அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் 21 பேர் துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இந்திய அரசின் உத்தியோகபூர்வமான ஆட்சேபக் கடிதத்தையும் அவர் ஸ்ரீலங்கா அதிகாரிகளிடம் கையளித்தார். [உ]

## புங்குடுதீவை இலக்கு வைத்து ஷெல், பீரங்கி தாக்குதல்கள்

### மக்கள் தொடர்ந்து இடம்பெயர்வு

புங்குடுதீவு, அக். 14

புங்குடுதீவுப் பகுதியை இலக்கு வைத்து ஸ்ரீலங்காப் படையினர் பல முனைகளில் இருந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி காரைநகர், ஊர்காவற்றுறை முகாம்களில் இருந்து புங்குடுதீவை நோக்கி ஆட்டிலறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதன் பின்னர் கடந்த சில தினங்களாக இரவு வேளையில் நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு முகாம்களில் இருந்து புங்குடுதீவுப் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ். இந்து 28 வயது B. Sc சிவில் எஞ்ஜினியருக்கு 7 இல் செவ்வாய் குற்றமுள்ள அழகான பட்டதாரி பெண் தேவை. நட்சத்திரம் ஆயிலியம் உயரம் 6' பாவம் 93/16, ABCDE 328 நாவலர் றோட், ஆனைப்பந்தி. (18400)

யாழ். இந்து 30 வயது கனடா I. C. M. A. எக்கவுண்டனுக்கு கனடாவில் அல்லது அங்கு அனுப்பக்கூடிய பெண் தேவை நட்சத்திரம் உத்தரம் 3 ஆம் பாதம், செவ்வாய் 4இல், பாவம் 31/16 ABCDE 328. நாவலர் றோட் ஆனைப்பந்தி [18399]

## வானொலி நாடகம்

வானொலி நாடகம் எழுதிப் பழகவேண்டுமா? ஓரங்க நாடகமென்றால் என்ன? 177 வானொலி நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்களை வாசியுங்கள். கெட்டிக்காரர்கள் 25/-. முதலாம்பிள்ளை 30/-. பூபாலசிங்கம், சிறீலங்கா, தமிழருவி. [18456]

## கராட்டி வகுப்புகள்

புதிய கராட்டி வகுப்புகள் 16 - 10 - 1991 புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகின்றன. குறிப்பு: வழமையான வகுப்புகள் சனி, ஞாயிறு கிழமைகளில், மாலை 4-30 மணிக்கு நடைபெறுகின்றன. ஆசிரியர்கள்: செ. கணேசலிங்கம், கு. ராஜேந்திரன். [18394]

## வைத்தியம்

செங்கண்மாரி, கடற்புண், தொய்வு, வரட்டு இருமல், பீனிசம், தலையிடி, தலைசுற்று, வாலவியல், குஷ்டம், சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [4325]

## சோதிடம்

உங்களுக்கு எத்தகைய கஷ்டமானாலும் தீர்த்து வைக்கப்படும். சாதகத்துடன் வரவும். சாதகம் இல்லாதவர்களும் வரலாம். திருப்தியற்றால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146 பருத்தித்துறை வீதி, [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி] நல்லூர். [18344]

## பின்போடப்பட்டது

சீட்டிழுப்பு பின்போடப்பட்டுள்ளது. மீசாலை தெற்கு மதுலன் சனசமூக நிலைய அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் பின்போடப்பட்டு 1 - 1 - 1992 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். தகவல்: நிர்வாகம் [18125]

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூரோ, 39/17, மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [ஜி/0687]

## வெள்ளிதெசை

ஜமகரச்சனி நெருக்கடிக்கு மத்தியிலும் பிரேமதாசாவின் வெள்ளிதெசை ஆயுட்கால ஜனாதிபதியாக்கும். மேலும் ஜனாதிபதியின் வைபோகம். ஜோதிட நூல்களுக்கு: R V. புத்தக நிலையம், கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். நூலாசிரியர்: Prof சத்தியதாஸன். [18121]

---

## மணமகள் தேவை

யாழ். இந்து, 48 வயது. கருமையான உதயலக்கினத்தில், அனுஷம் 3ஆம் பாதமும், செவ்வாய் 9 இலும், சந்திரன் 11 இலும், சுக்கிரன் 8 இலும் உள்ள படித்த விவாகமாகாத ஆணுக்கு 38 45 வயதிற்குட்பட்ட நல்லொழுக்கமுள்ள குடும்பப் பொறுப்பற்ற மணமகள் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். ஜாதகக் குறிப்புகளும் இணைத்து முழு விபரங்களுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 361,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
[18397]

---

Personal
# New Science Centre
Elilakam Front Lane,
JAFFNA.

## 93 A/L

★ கணித. உயிரியல் ★
விஞ்ஞானப் பிரிவு
ஆரம்பம்:
16—10—1991
4 p m

★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறலாம்.

[சி-0815]

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

# கிராமிய வங்கி சேமிப்பு கணக்குகள்
# மீளாய்வு செய்தல்

மேற்படி எமது சங்கத்தின் கிராமிய வங்கியில் சேமிப்பு கணக்குகள் வைத்திருப்பவர்கள் அவர்களின் சேமிப்பு புத்தகங்களுடனும், சேமிப்பு வைத்திருப்பதற்கான ஏனைய உறுதி செய்யக்கூடிய தஸ்தாவேஜுகளுடனும் பி. எஸ். சேவிஸ் நிலையத்தில் இயங்கும் எமது தலைமைக் காரியாலயத்திற்கு 21-10-1991— 25 10-1991 திகதிக்கு முன் சமூகமளிக்கவும்.

- பொது முகாமையாளர்.

## சங்க பொதுச்சபை உறுப்பினர்களுக்கு

தற்போது எமது சங்கமும், பொதுச்சபை உறுப்பினர்களும் இடம்பெயர்ந்துள்ளதால் அவர்களது வதியும் இடம் தெரியாததால் உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வதில் சிரமமாகவுள்ளது. எனவே அவர்கள் தங்கள் முகவரியை அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்,
பி எஸ். சேவிஸ்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

- செயலாளர்.

[சி-0721]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| வீரஜனனம்: | | வீரமரணம்: |
|---|---|---|
| 3 | | 15 |
| — | | |
| 5 | | 9 |
| — | | |
| 976 | | 1991 |



## வீரவேங்கை ஜெகன்
## (ஜெயநாதன் ஜெறோம்)

இவர் மணலாற்றில் நடைபெற்ற நேரடி மோதலில் 15-9-1991 இல் வீரமரணம் அடைந்தார்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்கான 15-10-1991 செவ்வாய்க்கிழமை காலை 6-00 மணிக்கு யாழ். அடைக்கலநாயகி தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறும்,
குடும்பத்தினரும், உறவினரும்.

25, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

[18...]

---

# றேடியன்ற் கல்வி நிலையம்
புங்கன்குளம், அரியாலை.

## 93 A/L
[100 பேருக்கு மட்டும் அனுமதி]

| | | |
|---|---|---|
| தூய/பிரயோக கணிதம் | - | திரு. A. குணசிங்கம் |
| விலங்கியல் | - | திரு நாகநாதன் |
| தாவரவியல் | - | திரு. செல்வநேசன் |
| பௌதிகம் | - | திரு. கலாமணி |
| இரசாயனம் | - | பிரபல ஆசிரியர் |
| பொருளியல் | - | திரு. உதயன் |
| கணக்கியல் | - | திரு தனபாலசிங்கம் |
| அளவையியல் | - | திரு. S S. மனோகரன் |
| வர்த்தகம் | - | திரு பசில் |
| தமிழ் | - | திருமதி அ. மீரா |
| இந்து நாகரீகம் | - | செல்வி பிறேமினி |

## ஆரம்பம்: 16 - 10 - 1991

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(18365)

---

# எமிலியானுஸ்பிள்ளை தொழில் நுட்பக் கல்லூரி
## அகில உலக கெயர்
# மரவேலைப் பயிற்சி

எமது உயர் கல்வி நிலையத்தில் நடத்தப்படவிருக்கும் 2½ மாத கால ஆரம்ப மரவேலைப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(1) 15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
(2) 8ஆம் வகுப்பும் அதற்கு மேல் படித்தவர்களும்.

## பயிற்சி ஆரம்பம்: 06-11-1991

## இடம்: 123, பிரதான விதி, யாழ்ப்பாணம்.

கொடுப்பனவு - பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு 600/- ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 26 - 10 - 1991 முடிவுக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபால் மூலமோ, நேரிலோ எமிலியானுஸ்பிள்ளை, தொழில் நுட்பக் கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பயிற்சி முடிவின் பின் அனைவருக்கும் இலவச உபகரணப் பொதி வழங்கப்படும்.

[18388] - இயக்குனர்.

---

# விசேட ஆங்கில வகுப்புகள்

To Help You
Begin Build up & Enrich Your English

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்கள்!!

## ஆரம்பம்; 19-10-1991 9 a.m.

க. பொ த சா/உ, தொழில்நுட்ப, பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்குரிய

# AN INTEGRATED ENGLISH
[6 மாதகாலப் பயிற்சி]

ஆரம்ப அறிவு குறைந்தவர்களுக்கான

# SPECIAL BASIC ENGLISH
[3 மாதகால துரிதப்பயிற்சி]

★ Speech Practice
★ Grammar & Usage
★ Vocabulary Enrichment
★ Practice in Writing

● வகுப்புகள் சனி, ஞாயிறு.
● அச்சடித்த பாடக்குறிப்புகள்.

# அஸ்ரன் கல்வி நிறுவனம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[சி 0716]

---

# சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்
# (வரையுள்ளது) சுன்னாகம்
# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி:- வங்கிச் சேவைகள் முகாமையாளர் குறியீட்டு இலக்கம் 111;07

சம்பளத்திட்டம்:-

ரூபா 1105 — 2170
60x4; 75x11

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும். சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:-

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் 1005 — 1705
40x5; 50x10
அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் 905 — 1605
40x5; 50x10
அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

(ஆ) இலங்கை வங்கிச் சேவை நிறுவனத்தின் டிப்ளோமா பரீட்சையில் பகுதி 1 இல் சித்தியுடன், வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்கு குறையாத அனுபவமும் அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி அல்லது அதற்கிணைந்த தகைமைகளுடன் வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்கு குறையாத அனுபவமும் அல்லது

(ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 03 பாடங்களிலான சித்தியுடன் வங்கித்துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை - உரொக்கப் பிணை ரூபா 4420/-
ஆதனப் பிணை ரூபா 15000/-

2. பதவி:- கிராமிய வங்கி முகாமையாளர் குறியீட்டு இலககம் 205;11

சம்பளத்திட்டம்:-

805 — 1260
25x7; 35x8

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும், சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:-

(அ) கிராமிய வங்கித்துறையில் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் ரூபா 760 — 1185
25x10 35x5
இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல்லது அதை ஒத்ததுறையில் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் ரூபா 730 — 1055
20x10; 25x5
நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல்லது

(ஆ) கிராமிய வங்கி லிகிதர் பதவியில் இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும், கூட்டுறவுப் பணியாளர் உயர் தராதரப் பத்திரமும்.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கப் பிணை ரூபா 4025/-
ஆதனப் பிணை ரூபா 15000/-

விண்ணப்ப முடிவு திகதி:- 28-10-1991

பொது:- பின்வரும் சான்றிதழ்களின் உண்மைப் பிரதி விண்ணப்பத்துடன் தவறாது இணைக்கப்படல் வேண்டும். இவற்றின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) கல்வி (ஆ) பிறப்பு
(இ) வதிப்பிடத் தகைமை
(ஈ) இரு நற்சான்றிதழ்கள் அண்மையில் பெற்றது.
(உ) சங்கப் பணிப்பாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

(1) விண்ணப்பங்கள் யாவும் 28-10-1991 அன்று பிற்பகல் 4-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம், சுன்னாகம். என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/-செலுத்தி வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- பொதுமுகாமையாளர்.

12-10-1991.
ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.

[சி-0810]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விருப்பம் விளைவு தர..

வடக்கிலும், கிழக்கிலும் நடந்து வரும் தேவையற்ற யுத்தம் விரைவில் முடிவுக்கு வரவேண்டும். இராணுவம் நீண்ட கால யுத்தம் ஒன்றில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பவர் வேறு எவருமல்லர்; ஜனாதிபதி திரு. பிரேமதாசா தான்.

ஜனாதிபதி மட்டுமல்ல, வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களும் யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்றே விரும்புகிறார்கள். தமக்குச் சேர வேண்டிய உரிமைகளை வழங்கிவிட்டால், அவர்களும் இந்த யுத்தம் தேவையற்றது என்ற நிலைப்பாட்டுக்கே வருவார்கள். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஜனாதிபதி பிரேமதாசா, அவருக்கு முன்னர் பதவியில் இருந்த ஜே. ஆர்., மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் தமிழர்களின் உரிமைகளை தக்க விதத்தில், உரிய வேளையில், வழங்கியிருந்தால் இன்றைய போராட்டம் வந்திருக்காது; தேவைப்பட்டிருக்காது.

தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்; சிங்கள மக்களுக்குள்ள சகல உரிமைகளையும் அனுபவிக்கும் அருகதை அவர்களுக்கும் உண்டு; அந்த உரிமைகளைப் பறிக்க கூடாது என்று சிங்களத் தலைவர்கள் நல்மனதோடு, தீர்க்கதரிசனத்தோடு ஆட்சி நடத்தியிருந்தால் இன்றைய நிலை தோன்றியிருக்காது; அவசியமாகியிருக்காது.

"நாங்கள் சமஷ்டி அரசியலை விரும்புகிறோம். ஆனால் தமிழர்களைத் திட்டமிட்டு அழிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுமானால் சுதந்திர ஈழம் கேட்கும் நிலை வரும் என எச்சரிக்கிறேன்" - என்று அமரர் கு. வன்னியசிங்கம் போன்றோர் நாற்பது வருடங்களுக்கு முன்னரே எச்சரித்தனர். சிங்களத் தலைவர்கள் அதனை அக்கறையுடன் பரிசீலனை செய்திருந்தால், இன்றைய யுத்தம் வந்திருக்காது. தமிழர்களைப் பொறுத்தவரையில் யுத்தம் அவர்கள் மீது அரசுகளால் சுமத்தப்பட்ட ஒன்று.

எனவே ஜனாதிபதி பிரேமதாசா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினால்—

தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு ஆக்கபூர்வமாகச் செயலில் இறங்க வேண்டும். உள்ளார்ந்த விருப்பத்துடன் எந்த முயற்சியில் ஈடுபட்டாலும், தடைகளின் மத்தியிலும் வெற்றி கிடைத்தே தீரும்.

எனவே யுத்தம் நீடிக்காமல் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, ஜனாதிபதியின் பங்கு மிகப்பெரியதாகும், எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்காமல், தமிழர்களை ஏமாற்றிவிடலாம் என்று எண்ணாது, அவர் காரியத்தில் இறங்க வேண்டும். அதற்கான முதற்படி தமிழர்கள் ஏற்கக்கூடிய ஒரு தீர்வை அரசாங்கம் முன் வைத்துப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதே ஆகும்.

தாம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாகத் தெற்கில் செய்யப்படும் பிரசாரத்துக்கு அஞ்சி, வடக்கில் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அங்கீகாரம் அளித்துவிட்டு, யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்று விரும்புவதில் அர்த்தமில்லை. பேச்சுத் தொடங்குவதற்கு முன்னோடியாக யுத்த நிறுத்தம் செய்வது மிக அவசியம். ஜனாதிபதி முதல் அதனைச் செய்வாரா?

---

பிரபல இந்தி நடிகர்களான

# ராஜேஷ்கன்னா - சத்ருகன்சின்ஹா புதுடில்லித் தொகுதியில் நேரடி மோதல்?

புதுடில்லி, அக். 14

பிரபல இந்தி நடிகர் சத்ருகன் சின்ஹா பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளராக புதுடில்லி தெற்கு நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார்.

இத்தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி கடந்த பொதுத்தேர்தலின் போது குஜராத் மாநிலம் காந்தி நகர் தொகுதியிலும், புதுடில்லி தெற்குத் தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பதும்—

பின்னர் புதுடில்லி தெற்குத் தொகுதி எம். பி. பதவியை அவர் இராஜினாமாச் செய்தார் என்பதும் தெரிந்தவையே.

அதனையடுத்தே புதுடில்லி தெற்குத் தொகுதியில் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

இந்தத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட பிரபல இந்தி நடிகர் ராஜேஷ்கன்னாவை அத்வானி தோற்கடித்திருந்தார்.

இடைத்தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் வேட்பாளராக ராஜேஷ்கன்னா போட்டியிட்டால், பாரதிய ஜனதாவின் சார்பில் போட்டியிடும் மற்றொரு நடிகரான சத்ருகன் சின்ஹாவை அவர் எதிர்த்து நிற்க வேண்டிய நிலையே ஏற்படும். [உ-எ]

## சரத் பவார் பராமதியில்

புதுடில்லி, அக். 14

இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் மகாராஷ்டிர மாநிலம் பராமதி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

ஆந்திர மாநிலம் நந்தியாக் நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடும் பிரதமர் நரசிம்மராவை எதிர்த்து பாரதிய ஜனதாக் கட்சி தனது வேட்பாளராக திரு. பங்காரப்பா லஷ்மன் என்பவரை நிறுத்தியுள்ளது. (உ-எ)

## அமேதியில் சதிஷ்சர்மா

புதுடில்லி, அக். 14

கப்டன் சதிஷ்சர்மா இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக உத்தரபிரதேசம்- அமேதி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடுவார்.

காங்கிரஸ் வேட்பாளர் நியமனக்குழு இந்த முடிவைச் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அமேதி நாடாளுமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல் நவம்பர் 16 இல் நடைபெற உள்ளது.

திருமதி சோனியா காந்தி இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட முன்வர மறுத்துவிட்டார். [இ-எ]

## தனியார் லொறி உரிமையாளர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக். 14

தனியார் லொறி உரிமையாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு சோண்டரிவில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தில் போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினரால் நடத்தப்பட உள்ளது.

கருத்தரங்கில் சகல தனியார் லொறி உரிமையாளர்களையும் கலந்து கொள்ளும்படி போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு கோரி உள்ளது. (இ)

## உதைபந்தாட்ட பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், அக். 14

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புகளை யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் இம்மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் நடத்த உள்ளது பிரதி ஞாயிற்றுக்கிழமையும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

## திருமலையில் பாதுகாப்பு

கொழும்பு, அக். 14

திருமலை நகரில் பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொது நூலகத்திற்கு அண்மையிலும், பெரிய முற்ற வெளிப்பகுதி சிவன்கோவிலடி ஆகிய இடங்களிலும் பாதுகாப்பு நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வீதித் தடைகளும் போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## கூட்டங்கள்

கொழும்பு, அக். 14

நாடெங்கும் பிரசாரக் கூட்டங்களை நடத்த ஐ.தே.க. தலைமைப்பீடம் முடிவெடுத்துள்ளது.

மாவட்ட ரீதியில் இக்கூட்டங்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கவச வாகன...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளில் சிக்கி ஆறு சிப்பாய்கள் காயங்களை அடைந்தனர் என்றும் தெரியவந்தது. [ஒ-3]

## யாழ்தேவி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழமையான ரயில் சேவையை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. (ஒ-எ)

# சிறுபான்மையினர் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்

## புத்தளத்தில் ஜனாதிபதி

கொழும்பு அக். 14

சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட வேண்டும். அந்த மக்கள் தாம் விரும்பும் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

—இவ்வாறு கூறினார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா புத்தளம் சாஹிராக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற மீலாது விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இப்படிச் சொன்னார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு, ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட முன்வந்தால் வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு தயாராக இருக்கிறது.

தாம் விரும்பும் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பு வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

ஒரேயொரு கட்சியிடம் மட்டும் பொறுப்புக்களை கொடுக்கும் யோசனையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

### தேர்தல்

ஜனநாயகத்தை நாம் பின்பற்றுகின்றவர்கள் என்ற வகையில், பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு மக்களின் கருத்துகளை அறிந்து கொள்வதற்காக எமது அரசு எப்போதும் தேர்தலை நடத்தி வந்துள்ளது.

கடந்த இரண்டரை வருடங்களில் பல தேர்தல்களை அரசு நடத்தியுள்ளது தேர்தல்கள் தேவையில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன.

மக்கள் முன் செல்ல அவர்கள் தயாரில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

பின் கதவால் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். அவர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

### வடக்கு கிழக்கில்

வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடந்த 17 வருடங்களாக பயங்கரவாதம் நிலவி வருகிறது. இந்தப் பயங்கரவாதம் ஏன் தலைதூக்கியது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக 1980 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபை யோசனை கொண்டு வரப்பட்டது

வடக்கு - கிழக்கு பகுதியில் உள்ள ஜனநாயகக் கட்சிகள் இந்த முறையை ஏற்றுக் கொண்டன.

அதிகாரங்களை பரவலாக்குவது குறித்து முன்னாள் ஜனாதிபதி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுக்கள் நடத்தினார்;

1983 ஆம் ஆண்டு நான் வடபகுதிக்கு விஜயம் செய்த சமயம் மாவட்ட அபிவிருத்தி சபை வெற்றியளிக்கும் என்ற அபிப்பிராயத்தை அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்;

### குழப்பம் விளைவித்தனர்

எனினும் வடபகுதியில் தேர்தல் நடைபெற்ற போது—

ஜனநாயகத்தை காக்கும் தலைவர்கள் என இனம் காட்டிக் கொள்ளும் சிலர் ஏனைய பகுதிகளில் இருந்து ஆட்களை அழைத்துக் கொண்டு வடக்கே சென்று அங்கே குழப்பம் விளைவித்தனர்.

யாழ். நூலகம் தீக்கிரையாக்கப்பட்டதற்கும் இவர்களே காரணம்.

வடபகுதி மக்களுக்கு அவர்களுக்குரிய அதிகாரங்களை வழங்க முடியாது என்று அப்போது கூறியவர்கள்தான் இனப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு இந்திய— இலங்கை ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர், இந்திய ராணுவத்தை இங்கு அழைத்து வந்தார்கள்.

வடக்கு - கிழக்கு பகுதியில் ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றிய கட்சிகள் பலவீனம் அடைவதற்கு இவர்களே பொறுப்பாளிகள். பலவீனமடைந்த கட்சிகளைச் சேர்ந்த இளைஞர்கள் வன்செயல்களில் ஈடுபட்டு யுத்தம் புரியும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஜனநாயகக் கட்சிகள் பலவீனம் அடையும்போது பயங்கரவாதத்தையும், வன்செயல்களையும் தடுக்க முடியாத நிலை ஏற்படும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய நெருக்கடிகளுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையில் ஜனநாயக ரீதியிலான முக்கிய கட்சிகள் பலமுள்ளவையாக இருக்க வேண்டும்- என்றார். [உ-எ-3]

## புங்குடுதீவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வருகின்றன.

அதே சமயம் கடற் பகுதிகளில் இருந்தும் பலத்த பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் தொடர்வதால் இங்கிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வெளியேறி வருகின்றனர். 75 சத வீதமான மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இடம்பெயர்ந்து சென்றவர்கள் யாழ் ரயில் நிலைய முகாமில் தங்கியுள்ளனர். அகதிகளின் பெயர், விபரங்கள் அங்கு பதியப்பட்டு வருகின்றன.

புங்குடுதீவில் பதற்ற நிலை தோன்றலாம் என்ற அச்சத்தினாலேயே பலரும் வெளியேறி வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது. நேற்றுப் பகலிலும் ஷெல் வீச்சு தீவிரமாக நடந்ததாக அறிய வருகிறது. [ஒ-131 125 3]

காமினி அமைச்சராகவிருந்தபோது

# அரசு கொள்வனவு செய்த வாகனங்கள் வெளியாரிடம் சென்றது எப்படி?

## விசாரணை நடைபெறுகின்றதாம்

கொழும்பு, அக். 14

திரு. காமினி திஸநாயக்கா மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது வாங்கப்பட்ட ஒரு கோடி 25 லட்சம் ரூபா பெறுமதியான 28 வாகனங்கள் வெளியாரின் கைகளுக்குச் சென்றது எப்படி?

இது பற்றி விசாரணை நடத்தப்படுகின்றதாம்.

இது தொடர்பாக இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. [இ-எ]

## தாக்குதல்!

கொழும்பு, அக். 14

மட்டக்களப்பு நாவற்குடா வெளிவீதியில் நேற்று முன்தினம் ரோந்து சென்று கொண்டிருந்த பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். அப்போது கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து பொலிஸார் அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். (ஒ)

## ஷெல் வீச்சு

சுழிபுரம், அக். 14

காரைநகர் படையினரின் ஷெல் தாக்குதல் நாளாந்த நிகழ்ச்சியாகி விட்டது. நேற்றுப் பகல் வேளையிலும் மூளாய் தெற்குப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன. சேதவிபரம் தெரிய வரவில்லை.

பொன்னாலை கடற்கரையோரப் பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது

ஷெல் தாக்குதல் நாளாந்தம் நடப்பதால் இப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். [ஒ-28]

## தொண்டாவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று அவர் பதிலளித்தார்:

"நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கும் சர்ச்சைக்குரிய யாழ் எம். பிக்களுக்கு போக்குவரத்து வசதியை ஏன் ஏற்படுத்திக் கொடுத்தீர்கள்?" என்று கேட்டபோது, "அதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி அளித்தது" என்று அவர் பதில் சொன்னார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொடியின் கீழ் அனுப்பப்படும் உணவுகளை விடுதலைப் புலிகள் பறிமுதல் செய்வதாகக் கூறப்படுவது பற்றிக் கேட்ட போது—

"எமது செயற்பாடுகள் எவ்வித தலையீடுமின்றி மேற்கொள்ளப்படுகின்றன. பருத்தித்துறையில் உணவுகளை இறக்கி அரச அதிபரிடம் ஒப்படைக்கிறோம். உணவு விநியோகத்தை நாம் மேற்கொள்வதில்லை" என்றார் அவர்.

"புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் 41 பொலிஸாரையும், சிப்பாய்களையும் மாதத்துக்கு இரு தடவைகள் எமது பிரதிநிதிகள் சந்திக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தேக சுகத்துடன் இருக்கின்றனர்"— என்றும் அவர் சொன்னார். [உ]

## முல்லைத்தீவில்...

| | |
|---|---|
| ★ தொலைநோக்கி | — 01 |
| ★ தொலைத் தொடர்பு கருவி | — 01 |
| ★ ஜே. ஆர். ரக கைக்குண்டு | — 01 |
| ★ 5·56 ரக ரவைகள் | — 10,200 |
| ★ 5·56 ரக ரவைத்தொடர் | — 5,044 |
| ★ 7 62 நடுத்தர ரவைகள் | — 950 |

இதேவேளை—

முல்லைத்தீவுப் பட்டினத்திற்கு அருகில் இராணுவ அணி ஒன்றின் மீது [illegible] புலிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 12 படையினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறினர் என்று இந்திய வானொலி தெரிவித்தது

விடுதலைப் புலிகள் மீது படையினர் கிரனேற் மற்றும் மோட்டார் குண்டுகள் கொண்டு தாக்கினர் என்றும்—

புலிகள் மேற்கொள்ள இருந்த தாக்குதலைப் படையினர் முறியடித்ததுடன், அவர்களுக்கு பலத்த இழப்புக்களையும் ஏற்படுத்[illegible] தெரிவிக்கப்பட்டதாக இலங்கை வானொலி அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

5 அந்தர் புத்தம் புதிய UNION தராசு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
எஸ் செல்லத்துரை,
59, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[18127]


# நாதஸ்வர மேதையின் மணிவிழா இன்று

யாழ்ப்பாணம், அக். 14

நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதனின் மணிவிழா இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படுகிறது.

இன்று காலை 9 மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் திரு. பத்மநாதன் தம்பதியருக்கு அறுபதாம் கல்யாணம் நடத்தி வைக்கப்படும்.

இந்த வைபவத்திற்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை வகிப்பார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் அருளாசியுடன் சிரேஷ்ட சிவாசாரியர்கள் கல்யாணத்தை நடத்தி வைப்பர்.

பிற்பகல் 2 மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் பாராட்டு விழா நடைபெறும். யாழ். மாநகர சபை ஆணையாளர் தொடக்க உரை நிகழ்த்துவார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி, திரு. சொக்கன், கலாநிதி இ. பாலசுந்தரம், திரு. பஞ்சாபிகேசன், கவிஞர் சோ. பத்மநாதன், நாவலியூர் க. சச்சிதானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

வாழ்த்துரை நிகழ்ச்சியின் பின்னர் டாக்டர் ரி. வெங்கடேசுவரனின் புல்லாங்குழல் கச்சேரி, இசைஞானி திலகம் உ. இராதாகிருஷ்ணன் குழுவினரின் வயலின் சோலோ, திரு. எஸ். பத்மலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி ஆகியன இடம்பெறும். [ச]


இன்று மணிவிழாக் காணும்
நாதஸ்வர மாமேதை
★ என். கே. பத்மநாதன் தம்பதிகளை ★
**இலங்கை இசை வேளாளர் சங்கம்**
**இதயம் கனிந்து வாழ்த்துகிறது**

மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை. (C/0818)
எஸ் ஆர். ஞானசுந்தரம்
[கௌரவ செயலாளர்]



## A/L 93

19 - 10 - 1991 முதல்

**ஆசிரியர் ஐங்கரநேசனின்**
**யூனிவேர்சல்**

சுந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

(இ/0803)



## "A" LEVEL CENTRE
(உயர் தராதர கல்வி நிலையம்)

பருத்தித்துறை ரோட், 1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**93** ஆரம்பம்: 19-10-1991
Sat. 6-15 a.m.

| | | |
|---|---|---|
| BOT: | 7-30 | — Mr. சிவவீரசிங்கம் B. Sc. |
| ZOO: | 11-00 | — Mr. தம்பிராஜா B. Sc. |
| PHY: | 8-30 | — Mr. சௌந்தி B. Sc. |
| PURE: | 11 00 | — Mr. கணேசன் B. Sc. |
| APP: | 12-00 | |
| CHE: Batch I | 6-15 | — Mr. நாகரட்ணம் B. Sc. |
| Batch II | 9-30 | |

(சி/0814)


## அறிவித்தல்

**யாழ். மாநகரசபை**
**யாழ். நகர அபிவிருத்தித் திட்டம்**

யாழ். நகர அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கான கேள்வி எங்களால் எதிர்வரும் 24 - 10 - 91 ஆம் திகதி பி. பகல் 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாவும் சபையினால் வழங்கப்படும் படிவத்திற்கமைய இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட படிவங்களை யாழ். மாநகரசபை மராமத்துப் பகுதியில் எதிர்வரும் 23 - 10 - 91 ஆம் திகதி பி. பகல் 3-00 மணி வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
11 - 10 - 1991.

[சி-0648]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# குடாநாட்டு குடிதண்ணீர் சுகாதாரத் தரம் குன்றியது!

## நீர்வள அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், அக். 14

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் வாழும் மக்கள் இப்பொழுது அருந்தும் தண்ணீர் சுகாதாரத்துக்குப் பாதகமானது. உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்த ஆகக்குறைந்த தரத்தை விடவும் குறைவாக இருக்கிறது.

இது குறித்து நவீன உபகரணங்களின் உதவியுடன் ஆராயப்படுவது அவசியம்.

இவ்வாறு யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளத்துறை குறித்து, தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் சிவில் பொறியியல் துறைகளைச் சேர்ந்த பல நிபுணர்களின் தலைவர்கள் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் கூடி ஆராய்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து நீர்வளத்துறையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. யோகராசாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. யோகராசா "குளங்களை ஆழமாக்கல்" "யாழ். குடாநாட்டின் நீர்வள அபிவிருத்திக்கான பாரிய திட்டம்" ஆகிய இரண்டு அறிக்கைகளைத் தயாரித்து துணைவேந்தரிடம் சமர்ப்பித்துள்ளார். "யாழ். குடாநாட்டின் நீர்வள அபிவிருத்திக்கான பாரிய திட்டம்" என்ற அறிக்கையிலேயே குடிதண்ணீரின் தரக்குறைவு குறித்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மற்றும் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ குடாநாட்டின் சுண்ணாம்புப் பாறைகளை இயந்திரங்களால் துளைத்து, ஆராய்ந்து, நிலநீரைச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ குடாநாட்டின் பிரதேச மண்வளங்களை ஆராய்வதற்குப் பொருத்தமான ஆய்வு கூடங்கள் நிறுவப்பட வேண்டும்.

★ யாழ். நன்னீர் ஏரித்திட்டத்தை விரிவாக ஆராய்ந்து பரிசீலித்துப் பயன்பெறுதல்.

★ குளக்கட்டுகள், உவர் நீர்த் தடுப்பு அணைகள், கடலேரித் திட்டங்கள், வெள்ளம் கடத்தும் வாய்க்காலைப் புனரமைத்தல் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

— இந்த அம்சங்கள் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

[அ]

## ரொனி வருகிறார்

கொழும்பு, அக். 14

முன்னாள் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் விரைவில் நாடு திரும்பவுள்ளார் என்று சொல்லப்படுகிறது. திருமதி மெல் ஏற்கனவே நாடு திரும்பிவிட்டார்.

திரு. ரொனி டி மெல் மீண்டும் அரசியலில் குதிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [அ]

## ஓய்வூதியரின் வாழ்க்கைப் படி கொடுப்பனவு

யாழ்ப்பாணம், அக். 14

ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைப்படி கொடுப்பனவாக ரூ. 260/- கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அரசாங்கத்துக்குத் தான் திருப்பம் அனுப்பியுள்ளதாக ஓய்வூதிய திணைக்கள இயக்குனர் திரு ஆர். டபிள்யு. பியசேன சம்பளையில் நடைபெற்ற மேல் மாகாண ஓய்வூதியர் சங்கத்தின் 15ஆவது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

(இ-10)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்!

கொழும்பு, அக் 14

பிரேமதாசாவின் அரசுக்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடி ஓரளவு குறைந்திருப்பதால், அரசை மேலும் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்யப்படும் என்று அறியவருகிறது.

ஐ. தே. க. அதிருப்தியாளர்களினால் ஏற்பட்ட வெற்றிடங்கள் இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லலித் அத்துலத் முதலி வகித்த கல்வி அமைச்சர் பதவிக்கு, தற்போதைய சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்றும் —

அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவுக்கு முக்கிய அமைச்சு ஒன்று வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றன.

சிரேஷ்ட இராஜாங்க அமைச்சர்கள் சிலர் அமைச்சர்கள் தரத்துக்கு உயர்த்தப்படலாம் எனவும், நாடாளுமன்ற பின்வரிசை எம். பிக்கள் சிலர் இராஜாங்க, திட்ட அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் எனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதற்கிடையில்—

அரசுடன் நெருக்கம் கொண்டுள்ள எதிர்க்கட்சி ஒன்றின் தலைவருக்கு அரசாங்கம் அமைச்சர் பதவி வழங்க விருப்பம் கொண்டிருப்பதாகவும்—

ஆனால் குறிப்பிட்ட தலைவர் அந்த எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதேசமயம்—

நாளை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் கலந்து கொள்ளும் விசேட கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச உரையாற்றவுள்ளார்.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ)

## 'போரூட்' பிரதிநிதி யாழ்ப்பாணத்தில்

"போரூட்" அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி போல் ஹென்றி கிரீலன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்.

## 6 ஆயிரம் பேரைக் காணவில்லை

# கிழக்கின் தமிழரின் நிலை: ஐ. நா. குழுவிடம் முறையீடு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த ஓராண்டு காலத்தினுள் சுமார் 6 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காணாமற் போயிருக்கின்றார்கள் என்று கொழும்பு வந்துள்ள ஐ. நா. மனித உரிமைகள் சபை உறுப்பினர்கள் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டு அல்லது படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

காணாமற்போன தமிழர்களைக் கண்டுபிடிக்கும்படியும் ஐ. நா. மனித உரிமை அமைப்பிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐ. நா. மனித உரிமைக் குழு கிழக்கு மாகாணத்திற்கு நேரில் சென்று மக்களிடம் இது பற்றிக் கேட்டறிய உள்ளதாக இந்திய வானொலி அறிவித்தது.

இந்தக் குழு நேற்று முன்தினம் மட்டக்களப்புக்குச் செல்லவிருந்தது. [உ-எ]


தென்மராட்சியில்...... கால்நடை வளர்ப்போரே!
**எமது கால்நடை வளத்தை அபிவிருத்தி செய்வோம்**

இதோ! உங்களை நோக்கி ஓர் உதவிக்கரம்

கால் நடை உணவு வகைகளை
நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும்,

உங்களின் உற்பத்திகளுக்கு
நியாய விலையைப் பெற்றுக் கொள்ளவும்,

எம்முடன் தொடர்பு கொள்ளவும்:

தென்மராட்சியில்:

**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
கமநல சேவைகள் நிலையக் கட்டடம்,
கண்டி வீதி, மீசாலை வடக்கு.

**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

[இ-0647]


## மரண அறிவித்தல்

**இராசையா செல்வராசா**

பருத்தித்துறை 2 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த இராசையா செல்வராசா 13 - 10 - 91 அன்று சிவபதமடைந்தார்.

இவர் 'பரந்தாமன் ட்ரான்ஸ்போட்' உரிமையாளரும், ராணி அம்மாவின் அன்புக் கணவரும், செல்வராணி, இந்திராணி [ஜேர்மனி], வசந்தராணி, கிருஷ்ணராஜா [கண்ணன்], பரமேஸ்வரராஜா [ஜேர்மனி], கோபாலகிருஷ்ணன், சேசராணி, மண்டலேஸ்வரி, குகன் [ஜேர்மனி], பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலுப்பிள்ளை [முல்லைத்தீவு], சிவகுமார் [ஜேர்மனி], கலாவதி ஆகியோரின் மாமனாரும், தவச்செல்வம், சுதாகர், ரஞ்சினி, திவாகர், ஷலினி ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற சின்னராசா (பரிமளம்), துரைராசா, நடராசா, அன்னமுத்து, அன்னலக்ஷ்மி, பாக்கியலக்ஷ்மி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று [1991 - 10 - 14] திங்கட்கிழமை மு. ப. 10-00 மணிக்கு பருத்தித்துறை குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

2 ஆம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

(18455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org